62

<u>மருத்துவக்கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை –10 அவர்களின் செயல்முறை ஆணை</u>

<u>முன்னிலை: மரு.ரா.நாராயணபாபு, எம்.டி., டி.சி.எச்.,</u>

<u>ந.க.எண்:72353/நி2/4/2020</u> <u>நாள்: 20.10.2022</u>

பொருள் : நிர்வாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.எ.பிராங்ளின் த/பெ.(லேட்) திரு.அ.எமர்சன், இளநிலை உதவியளர், அரசு இராசாமிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் – பணிவரன்முறை – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை)எண்:560, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய அரசாணைகள்.
2. அரசாணை (நிலை)எண்:120, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.06.1995.
3. அரசாணை (நிலை)எண்:42, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:12.03.2007.
4. அரசாணை (நிலை)எண்:202, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:08.10.2007.
5. அரசாணை (நிலை)எண்:18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:23.01.2020.
6. அரசாணை (நிலை)எண்:48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள்:26.02.2020.
7. அரசு கடித எண்:8775/ஏடி2/2020–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2)துறை, நாள்:16.03.2020.
8. இவ்வியக்கக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்:37662/நி2/4/2019, நாள்:25.10.2019.
9. முதல்வர், அரசு இராசாமிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர் அவர்களின் பணிநியமன ஆணை ந.க.எண்:6447/நி2/2011, நாள்:15.11.2019.
10. முதல்வர், அரசு இராசாமிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்:6447/நி2/2011, நாள்:30.11.2020 மற்றும் 15.02.2021.

*****

..2...

ஆணை:

தஞ்சாவூர், அரசு இராசாமிராசுதார் மருத்துவமனையில் மருத்துவமனைப் பணியாளராகப் (Hospital Worker) பணிபுரிந்து கொண்டிருந்த திரு.அ.எமர்சன் அவர்கள் 15.08.2009 அன்று பணியில் இருக்கும்போது மரணமடைந்து விட்டார். அவரின் பிறந்த தேதி 27.06.1965 ஆகும். அவர் தொடர்ந்து பணியிலிருந்திருப்பின் அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.06.2025 ஆகும். மேற்படி அரசு ஊழியர் இறந்ததைத் தொடர்ந்து, அவரின் மகனும் வாரிசுதாரருமான திரு.எ.பிராங்ளின் அவர்கள் தனது 03.05.2010 மற்றும் 10.08.2011 நாளிட்ட கடிதங்களில் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்தார்.

2) மனுதாரர் திரு.எ.பிராங்ளின் அவர்களின் பிறந்த தேதி 30.01.1994 ஆகும். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்தால், பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)-ன்படி, தற்காலிகமாகக் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக ரூ.19500 - 71900 - நிலை-8 (Level-8) என்ற சம்பள முறையில் பணிநியமனம் செய்யப்பட்டு, தஞ்சாவூர் அரசு இராசாமிராசுதார் மருத்துவமனையில் 18.11.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

3) எனவே, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.எ.பிராங்ளின் என்பவரின் தற்காலிக பணியினை, பார்வை 6 மற்றும் 7-ல் காணும் அரசாணைகளின் அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் சேர்ந்த நாளான 18.11.2019 முற்பகல் முதல், அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்து செயல்முறை ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுவதன் மூலம் தனியருக்கு முதலாண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவையிருப்பின் அவற்றை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ரா.நாராயணபாபு
மருத்துவக் கல்வி இயக்குநர்

பெறுநர்

திரு.எ.பிராங்ளின்,
இளநிலை உதவியார்,
அரசு இராசாமிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்.
- உரிய வழியாக.

..3...

2. முதல்வர், அரசு இராசாமிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்.
3. மாநில கணக்காயர், சென்னை – 600 018.
4. மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர்.

நகல்:

இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, சென்னை–06.

உதிரி / இருப்பு கோப்பு.

// உண்மை நகல் / அனுப்பப்படுகிறது //

மேலாளர்